விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஐப்பசி 04 சனிக்கிழமை (21.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 297

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

# நாகர்கோயில் கடற்பரப்பில் நேற்று இரவு கடும் மோதல்

## இரு டோறா மூழ்கடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் கடற்பரப்பில் கடற்புலிகளிற்கும் கடற்படையினருக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றுள்ளது. நேற்று மாலை 6.30 மணிக்கு ஆரம்பமான மோதல் சம்பவம் இரவு 8.30 மணிவரையும் தொடர்ந்ததாக வடமராட்சிச் செய்திகள் தெரிவித்தன.

இந்த மோதலில் விடுதலைப்புலிகளின் இரண்டு படகுகளை தாக்கிய ழித்ததில் அதிலிருந்த 10 பேர் உயிரிழந்ததாக தேசிய பாதுகாப்பு தொடர் பான ஊடக மத்தியநிலையம் தெரிவித்தது. இதேவேளை தமது தரப்பில் எவ்வித இழப்பும் ஏற்படவில்லை என விடுதலைப்புலிகள் தெரிவித்ததாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

## முதல் சுற்றுப் பேச்சுக்களின் போதே அடுத்த சுற்றுக்கும் இணங்க வேண்டும்

### எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டு

(ஒஸ்லோ)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதான முன்னெடுப்புகளுக்கு சர்வதேச சமூகத்தின் கூடுதலான பங்களிப்பை நோர்வே வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இம்மாத இறுதியில் ஜெனீவாவில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சந்தித்து பேச்சுக்களை நடத்துவதைவிட மீண்டும் சந்திப்பதற்கு இணங்குவதே முக்கியமானது என எரிக்சொல்ஹெய்ம் சுட்டிக் காட்டியுள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றிலிருந்து நேற்று சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

நீராவியடி சைவபரிபாலன சபைக் கிணற்றினுள் இருந்து இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவரது மரணம் குறித்து மர்மம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கஸ்தூரியார் வீதியிலுள்ள வீடொன்றிலிருந்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

அக்கொள்ளைச் (06 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வட.கிழக்கில் ஹர்த்தாலுக்கு அழைப்பு

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணங்களின் இணைப்பு சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 25 ஆம் திகதி வடக்கு-கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான அழைப்பை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ளது. நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளதாவது,

நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த நான்கு நாட்களாக பாராளுமன்ற நடவடிக்கைகளை முடக்கும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம்.

எனினும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை போராட்டத்தை நிறுத்தி அரசின் பதிலுக்காக காத்திருக்கின்றோம். (06 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சு சமாதானத்திற்கான புதிய ஆரம்பம்

### அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனீவாவில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகள் புதிய ஆரம்பமாக அமையும் என அமெரிக்காவின் தெற்காசியப் பிராந்தியத்திற்கான துணைச் செயலர் ரிச்சட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

சுவிஸ்லாந்தில் இம் மாத இறுதியில் மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள்,தற்கால சூழ்நிலையில் புதிய ஆரம்பமாக அமையவேண்டுமென அமெரிக்கா எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

இரு நாள் (06 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சமாதானக்குழு 23 ஆம் திகதி ஜெனீவா பயணம்

(கொழும்பு)

ஜெனீவா பேச்சுவார்த்தைக்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் தூதுக்குழு நாளை மறுதினம் திங்கட்கிழமை இலங்கையிலிருந்து புறப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.எனினும் அந்தத் தூதுக்குழுவில் இடம் பெறுபவர்களின் விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.அதே நேரம் அரசாங்கத் தூதுக்குழு எதிர்வரும் 25 ஆம் திகதி ஜெனீவா செல்லவுள்ளது.

விடுதலைப்புலிகளின் பயண ஒழுங்குகள் குறித்து அவர்கள் தரப்பிலிருந்து எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை.ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

## ஹோட்டல் உரிமையாளர் நகரில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் மோட்டார் சைக்கிளில் சென்ற ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச் சம்பவத்தில் மானிப்பாய் வீதியைச் சேர்ந்த குருசாமி கதிரவேலு (வயது 44) என்ற வர்த்தகரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்றுக் காலை 10.30 க்கு குறித்த ஹோட்டலிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத ஆயுததாரிகள் இருவர், உரிமையாளரைச் சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை குறித்த வர்த்தகரின் மனைவி மற்றும் (06 ஆம் பக்கம் பார்க்க)

## வேலை முடிந்து சென்ற வர்த்தகர்கள் இருவர் நவக்கிரியில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் நவக்கிரியில் நேற்று முன்தினம் மாலை 5.30 ,மணியளவில் இரு வர்த்தகர்கள் இனந்தெரியாத ஆயுதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் துன்னாலை கரவெட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தியாகராசா (வயது 59) மற்றவர் அச்சுவேலி நாவலடியைச் சேர்ந்த குலம் குணராசா (வயது 27) ஆகிய இரு வர்த்தகர்களே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வீடு திரும்பிச் செல்லும்போது குறித்த வர்த்தகர்கள், மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இருவர் சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு நேற்று சென்ற மல்லாகம் நீதிவான் சறோஜினி இளங்கோவன் சடலங்களை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு அச்சு வேலிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-5)

உள்ளே... குருப்பெயர்ச்சி (12 ராசிகளுக்குமான பலன்கள் உங்கள் வலம்புரியில் தொடர்ந்து வரும்)

## கூலித்தொழிலாளி சுட்டுக்கொலை

(துன்னாலை)

கரவெட்டி சம்பந்தர் கடைக்கு அருகாமையிலுள்ள சந்திக்குள சந்தியில் நேற்றுக் காலை 9 மணிக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த கூலித் தொழிலாளி ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

கரவெட்டி இராச கிராமத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான தியாகராஜன் தில்லைநாதன் (வயது 28) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

குறித்த நபர் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டதாக (06 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். ப.நோ.கூ.சங்கத்தில் பங்கீட்டு அட்டைக்கு அரிசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கிளைகள் மூலம் மக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு அரிசி பகிர்தளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி ஒன்று, இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட பங்கீட்டு அட்டைக்கு 2 கிலோவும் மூன்றுக்கும் அதற்கு மேற்பட்டோருக்கு 3 கிலோவும் வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளது.

இது தவிர தற்போது அரச உத்தியோகஸ்தர்களுக்கு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பொருள்களைக் கொள்வளவு செய்ய முன்னுரிமை அளிக்கப்படுவதுபோல இதர நாட்களில் மாலை 4 மணிக்குப் பின் முன்னுரிமை அடிப்படையில் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம் எனவும் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் அறிவித்துள்ளது.(எ-133)

# நிவாரணப் பொருள்கள் வழங்குவதில் தாமதம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பிரதான கிளையில் பல கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு பொருள்கள் விநியோகிக்கப்படுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த18 ஆம் திகதி புதன்கிழமை ஜே/49 பிரிவுக்கும் கடந்த 19 ஆம் திகதி ஜே/50,51, 54 பிரிவுகளுக்கும் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

எல்லாக் கிளை மக்களும் ஒரே கிளையில் எடுப்பதால் பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளது. இதனால் நிவாரணப் பொருள்கள் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-72)

# தீவக நோயாளர்கள் கிளினிக் வர முடியாத நிலை

தீவுப் பகுதியிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவுப் பகுதியிலிருந்து அல்லைப்பிட்டியூடான போக்குவரத்தின்போது காலதாமதம் ஏற்படுகின்றது. அதனையும் தாண்டி வைத்தியசாலை கிளினிக்குக்கு செல்லும்போது நேரம் கடந்துவிட்டது எனவும் அடுத்த தவணை வருமாறு கூறப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது .தினமும் இவ்வாறு தொடர்வதால் தாம் கிளினிக்குச் சமுகமளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(ச-72)

# அவசர கலந்துரையாடல்

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மை ஆசிரியர்,உதவி ஆசிரியர்களை தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச சபை செயலாளர் ரி.வே.குலநாயகம் கேட்டுள்ளார். (ச-9)

# சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் கட்சியின் பெயரைப் பயன்படுத்துகின்றனர்

## ஈ.பி.டி.பி. குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஆட்கடத்தல் போன்ற சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் தமது கட்சியின் பெயரைப் பயன்படுத்தி தமது கட்சிக்கு களங்கம் ஏற்படுத்துவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி குற்றஞ்சுமத்தியுள்ளது.இது தொடர்பாக அக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இன்று ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி பல்வேறு சமூக விரோத சக்திகள் ஆட்கடத்தல், கப்பம் வசூலித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இத்தகைய சில நடவடிக்கைகளின் போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பெயரைக் கூறி இத் தீய சக்திகள் மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் பற்றிய விபரங்களைக் கட்சிக்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ தெரிவிக்குமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சமூக விரோதச் செயல்களான ஆட்கடத்தல்,கப்பம், வரி வசூலிப்புப் போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளில் பல்வேறு சமூக விரோதச் சக்திகளும் உதிரிக்குழுக்களும் தனி நபர்களும் ஈடுபட்டு வருவதுடன்,

அவர்களின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பெயரை பாவிப்பதன் மூலம் கட்சியின் மீது களங்கம் ஏற்படுத்த முற்பட்டுள்ளனர்.

இத்தகைய நடவடிக்கைகளை எமது கட்சி ஆரம்பம் முதலே எதிர்த்தும் கண்டித்தும் வந்துள்ளது. இதுபோன்ற செயற்பாடுகளுக்கு தமிழ் பேசும் மக்கள் எக் காரணம் கொண்டும் துணை போக வேண்டாம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வேண்டுகோள் விடுக்கின்றது என அக் கட்சியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தனது பதவி விலகலை அங்கீகரிக்குமாறு கூட்டுறவுச் சங்கத் தலைவர் கோரிக்கை

தலைமைப் பதவியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளுமாறு யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலை வர் ச.த. கணநாதன் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரைக் கோரியுள்ளார்.

இது தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அவர் கடிதம் ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளார். சங்கத்தை நடத்தும் தலைமைப் பொறுப்புக்குயாரையாவது நியமித்து தன்னை 2006.10.31 இல் இருந்து அல்லது 2006.11.08 இல் இருந்தாவது விடுவித்து உதவுமாறு அவர் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

இப் பதவி விலகலானது நிதானமாகச் சிந்தித்து தொட்டத் தெளிவாக எடுத்த முடிபு என அவர் அறிவித்துள்ளார். (ச-133)

# அதிபர் நியமனம்

(கோப்பாய்)

ஊரெழு கணேச வித்தியாலயத்தின் அதிபராக சி.திரிகரன் நியமிக்கப்பட்டுள்ளார். விஞ்ஞான முதுமாணியான இவர் இதுவரை ஆவரங்கால்நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தின் உப அதிபராகக் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-79)

# காணாமல் போன ஆட்டோ சாரதி நேற்று உயிருடன் மீட்கப்பட்டார்

கடந்த புதன்கிழமை சாவகச்சேரி கனகம் புளியடியில் வைத்துக் காணாமல்போன ஆட்டோ சாரதி மரணத்தின் பிடியிலிருந்து தப்பி பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காணாமல்போய் மீட்கப்பட்டவர் சாவகச்சேரி சிவன்கோவிலடியைச் சேர்ந்த கந்தையா காண்டீபன்(வயது-26) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையான ஆட்டோ சாரதி ஆவார்.

மீட்கப்பட்ட குறித்த குடும்பஸ்தர் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அ.பிரேம்சங்கர் முன்னிலையில் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

தப்பி வந்த அவர் கைது செய்யப்பட்டமை முதல் மரணத்தின் பிடியிலிருந்து தப்பி வந்தமை வரையும் யாழ்.மனித உரிமைக் குழுவிடம் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கப்பூர்வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரது ஆட்டோ இது வரையும் மீட்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

# நுணாவிலுக்குச் சென்ற இருவர் வீடு திரும்பவில்லை என முறையீடு

(யாழ்ப்பாணம்)

நுணாவிலுக்குச் சென்று வீடு திரும்பிய இருவரைக் காணவில்லை என யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கந்தர்மடம் அரசடியைச் சேர்ந்த மோகனதாஸ் கண்ணதாஸ் (வயது-29) மற்றும் இராஜி தவராஜ் ஆகிய இருவருமே காணாமல் போயுள்ளதாக அம் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நுணாவிலிலுள்ள உறவினர் வீட்டிற்குச் சென்று அங்கிருந்து வீடு திரும்பிவிட்டார்கள் என உறவினர்களால் கூறிய போதும் இவர்கள் இருவரும் இதுவரை வீடு திரும்பவில்லை என அம் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## மேலும் நான்கு சடலங்கள் நேற்று கரை ஒதுங்கியது

காலி படை முகாமை தாக்கிய வேளையில் உயிரிழந்ததாக சந்தேகிக்கப்படும் விடுதலைப்புலிகளின் மேலும் 4 சடலங்கள் நேற்றுக் காலை கரை ஒதுங்கியதாக காலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை நேற்றுமுன்தினம் 4சடலங்கள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த எட்டுச் சடலங்களும் காலி கரப்பிட்டி போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (ச-9)

# மினி உலகக் கிண்ணத் தொடர்

# நியூசிலாந்துடனான லீக் போட்டியில் இலங்கை அணி அபார வெற்றி




(மும்பை)

நியூசிலாந்துடனான லீக் போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இந்தியாவில் நடைபெற்று வரும் மினி உலகக் கிண்ணப் போட்டியில் நேற்றைய லீக் போட்டியில் பிரிவு பியைச் சேர்ந்த இலங்கை-நியூசிலாந்து அணிகள் மோதின.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி; முத்தையா முரளிதரன், ஜெயசூர்யாவின் துல்லியமான சுழலில் 9 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் டானியல் விக்டோறி ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும் அஸ்ரில் 42 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 25 ஓட்டங்களை வழங்கியது இலங்கைஅணி.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக முத்தையா முரளிதரன் 10ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்திய அதேவேளை சனத் ஜெயசூர்யா 26 ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுக்களையும் லசித்த மலிங்க 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 166 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி ஆரம்பத்திலிருந்தே அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 36 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் தரங்க 56 ஓட்டங்களையும் அணித் தலைவர் மஹேல ஜெய வர்த்தனா 48 ஓட்டங்களையும் பெற்றனர். இந்த வெற்றியுடன் இலங்கை அணி 2 புள்ளிகளைப் பெற்றது. ஆட்டநாயகனாக முத்தையா முரளிதரன் தெரிவாகினார். (ச-5)

# கணவன், மனைவி உட்பட மூவர் கடத்திக் கொலை

(கொழும்பு)

கொழும்பில் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்ட கணவன், மனைவி உட்பட மூவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை கொட்டாவை வீட்டுத்திட்டத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட டேவிற் விக்னேஸ்வரன் அவரது மனைவி திருக்கேதீஸ்வரி ஆகியோரின் சடலங்கள் நேற்று அதிகாலை பிலியந்தலையில் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினமிரவு மட்டக்குளியில் கடத்திச் செல்லப்பட்ட அச்சக ஊழியரான மன்னாரைச் சேர்ந்த ரெஜி பாலானந்தம் என்பவரின் சடலம் ராகமயவில் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(ச-9)

# 7தமிழ் இளைஞர்கள் மன்னாரில் கைது

தலைமன்னாரிலிருந்து மன்னார் மாவட்டத்திற்குப் புறப்பட்ட ஏழு தமிழ் இளைஞர்கள் கற்பிட்டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர்களது பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

19 முதல் 35 வயது வரையுள்ள இந்த இளைஞர்கள் தங்களது தொழிலுக்காக சிறிய படகுகளை வாங்குவதற்கு மன்னார் சென்ற போதே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட ஏழு இளைஞர்களையும் விசாரித்த நீதிபதி அவர்களை ஒக்டோபர் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

தங்களது பிள்ளைகளை விடுவிக்க உதவுமாறு அவர்களது பெற்றோர் மன்னார் மாவட்ட மக்கள் சமூகநல அமைப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-5)

# அசுரபலம் அழியட்டும்: அமைதி இனி நிலவட்டும்!

இன்று தீபாவளித் திருநாள். சைவ மக்கள் கொண்டாடும் தினங்களில் இது மிக விசேடமானது. இறைவனை ஒளி மயமாக்கி, மங்களகரமாகக் குத்துவிளக்கேற்றி, எமது வாழ்வும் ஒளி மயமாக வேண்டும் என்று வழிபாடியற்றும் பொன்னான நன்னாள்.

எல்லோரும் புத்தாடை அணிந்து, முகமலர்ச்சியுடன் மூத்தோர் ஆசி பெற்று, கடவுளை வணங்கி தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து புத்துணர்ச்சி பொங்க இந்நாளைக் கொண்டாடுவர்.

எமது துன்பங்களும், துயரங்களும் நீங்க வேண்டுமாயின் ஆண்டவன் அருள் வேண்டும். அறியாமை என்னும் இருள் அகல வேண்டுமாயின் ஞான தீபத்தின் ஒளி வேண்டும் . ஓர் அறையில் உள்ள இருட்டு இல்லாமற் போக வேண்டுமாயின் அங்கே தீபம் ஒன்று ஏற்றப்படவேண்டும். அது போல மனிதர்களின் புத்தியிலுள்ள அறியாமை இருள் நீங்குவதற்கு ஞானதீபம் ஒளி விடும் நாளே தீபாவளியாகும். இது ஒரு மங்களம் நிறைந்த மகிழ்ச்சியான நாள்.

முன்னர் திருமால் நரகாசுரனைச் சங்கரித்த போது, ''நான் இறந்து பட்ட இந்த நாளை எல்லோரும் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும்'' என்று அவன் வேண்டிக் கொண்டானாம். அவனுடைய அகங்காரமும், அசுரபலமும் அழிந்த நாள் இது. அகந்தையிருளகன்று ஞான ஒளி பெற்ற நன்னாள்.

பிரகலாதனின் பேரனும் திருமாலின் அடியவனுமாகிய மகாபலிச் சக்கரவர்த்தி , வாமன் உருவில் வந்த மகா விஷ்ணுவின் திருவடியைத் தன் சிரசில் சூடிக் கொண்ட நாள் தீபாவளி என்று வாமன புராணம் கூறுகிறது. இரர்மபிரான் இராவணனைக் கொன்று அயோத்தி திரும்பிய போது மக்கள் நகரை அலங்கரித்து தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்துக்கொண்டாடிய நாள் என்றும், பாற்கடலைக் கடந்த போது அதிலிருந்து வெளிப்பட்ட மகாலக்ஷ்மி திருமாலுக்கு மண மாலையிட்ட நன்னாள் என்றும் கூறப்படுகிறது.

தீபாவளியன்று சூரியன் உதிக்கும் முன் எண்ணெய் தேய்த்து நீராடவேண்டும். இந்த முழுக்கோடு ஆணவத்துக்கும், அகந்தைக்கும், கோபத்துக்கும் முழுக்குப் போட்டுவிடவேண்டும். அப்போது தான் ஞான ஒளி கிடைக்கும். நரகாசுரன் தான் அழிந்து போனாலும் நம் எல்லோரையும் இறைவனை நினைக்கச் செய்தவன். அதன் காரணமாக தேய்பிறைச் சதுர்த்தசியும் ஏற்றும் தீபங்களால் ஒளிபெற்று வளர்பிறை ஆயிற்று. ஆண்டவன் கிருபையால் இனியாவது அமைதி நிலவட்டும் ; சாந்தம் பரிணமிக்கட்டும்; இன்பம் துளிர் விடட்டும். மக்கள் எல்லோரும் மகிழ் வுடன் வாழ தீபாவளித் திருநாளை இரு கரங்கூப்பி வரவேற்று ஆனந்த வாழ்வுக்கு அடிகோலுவோமாக.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது தீபத்திருநாள் வாழ்த்துக்கள்!
பலசரக்குப் பொருட்கள், மிக்ஷர் தயாரிப்பிற்கான பொருட்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்
ஜெகன் களஞ்சியம்
இல: 285, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
T.P-021 222 5035

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது தீபத்திருநாள் வாழ்த்துக்கள்!
01.10.2006 முதல் 21.10.2006
Sale தீபாவளி மலிவு விற்பனை Sale
நீங்கள் வாங்கும் சகல பொருட்களுக்கும்
விசேட கழிவு
உங்கள் தெரிவுகளுக்கு
உடன் விஜயம் செய்யுங்கள்


லைடன் புடவையகம் நிலையம்
இல.410 ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாக
யாழ்ப்பாணம். T.P 222 2381

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

இளம் பருவத்தினருக்காக
அன்புடன்...

18+ இளைஞர் சேமிப்புக் கணக்கு



பதினெட்டு (18) தொடக்கம் 35 வயதிற் குட்பட்ட இரு பாலாருக்குமென விசேடமாக உருவாக்கப்பட்டுள்ள 18+ இளைஞர் சேமிப்புக் கணக்கு, சிறந்த பல பயன்களைப் பெற்றுத்தருகிறது. சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு வழங்கும் வட்டி வீதத்தைவிட 0.5% அதிக வட்டி வழங்கப்படுவது இச் சேமிப்புக் கணக்கின் முக்கிய அம்சமாகும்.

இதில் அடங்கியுள்ள
ஏனைய பயன்கள்:

- ரூ. 500,000 வரை காப்பீட்டுக் கவசம்
- திருமணப் பரிசாக ஒரு தங்கப் பவுண். முதற் குழந்தைக்கு சேமிப்புக் கணக்கு
- உயர் கல்விக்காகப் புலமைப்பரிசில்
- கடன் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும் தகைமை
- விசா இலெக்ட்ரோன் அட்டையைப் பெற வசதி
- கடன் பெற்றுக்கொள்ள வசதிகள்

மேலதிக விபரங்களுக்கு அண்மையிலுள்ள இலங்கை வங்கிக் கிளை முகாமையாளரை அல்லது தலைமை அலுவலகத்தின் ATM முகாமைத்துவப் பிரிவினரைத் தொடர்பு கொள்ளவும்.

BOC

# குருப் பெயர்ச்சி

விய ஆண்டு ஐப்பசி 3ஆம் திகதி (20.10.2006) இரவு 11.57 மணிக்கு குரு பகவான் துலா ராசியிலிருந்து விருச்சிக ராசிக்கு இடம்பெயர்ந்துள்ளார். இதையொட்டிய 12 ராசிகளுக்குமான பலன்கள்....



## மேஷம்

(அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம்)

மற்றவர்களின் நல்வாழ்விற்காக தன் பங்கை முன்வந்து தரும் மேஷ ராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு 7ஆம் இடத்தில் துலாம் ராசியில் இருந்த குருபகவான் இப்போது 8ஆம் இடமான விருச்சிக ராசியில் பெயர்ச்சியாகி உள்ளார். உங்கள் ராசிக்கு 2, 4, 12ஆம் இடம் ஆகியவற்றை பார்க்கிறார். அர்த்தாஷ்ட சனி நடப்பதாலும், குரு 8ஆம் இடத்தில் இடம்பெற்றதாலும் நீங்கள் இதுவரை சேர்த்துவைத்த நற்பலன்களை தற்காத்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தை குரு பார்ப்பதால் பேசும் வார்த்தை இனிமையாகவும், குடும்ப நன்மையை கருத்தில் கொண்டும் சாந்தமாக மாறிவிடும். பண வரவு கூடுதலாக பெறும் வழிவகைகள் கிடைக்கும். ஆனால் செய்யும் தொழிலில் நேர்மையைக் கடைப்பிடிப்பது அவசியமாகும். சகோதரர்கள், உங்கள் பார்வை மற்றும் கட்டுப்பாட்டில் இருந்து விலகிச் செயல்படுவதால் பிரச்சினைகள் வரலாம். சமூகப்பணியில் ஆர்வம் உள்ளவர்கள் பின் விளைவுகளை கவனத்தில் கொண்டு செயல்படுவது நல்லது.

வீடு, வாகன வகையில் சிரமங்கள் விலகி நல்ல பலன் கிடைக்கும். தாய்வழி உறவினர்களிடம் சமரச போக்கு உண்டாகும். புத்திரர்கள் படிப்பில் சிறந்த நிலையை காண்பார்கள். இருப்பினும் அவர்களின் வெளிவட்டார பழக்கவழக்கத்தை கவனித்து பாதுகாப்பது நலம் தரும். கடன், வழக்கு விவகாரங்களில் சமரச தீர்வுகள் காலதாமதம் ஆகலாம். கணவன், மனைவி ஒற்றுமை சிறப்பு பெற குருவின் நல்லருள் உள்ளது. நண்பர்களின் உதவியால் முன்னேற்றம் தரும் வாய்ப்பு கிடைக்கப்பெறுவீர்கள். ஆடம்பர வாழ்க்கை வசதியில் நாட்டம் ஏற்பட்டு, கூடுதல் பணச்செலவு ஏற்படும்.

தொழில் சார்ந்த வகையில் முன்னேற்ற சூழ்நிலை உருவாகும். தகுந்த முறையில் பயன்படுவதால் வளர்ச்சி நிச்சயம். வெளியூர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் சாதகமான நிலை உண்டு.

### குரு வக்ர கால பலன் (05.04.07 முதல் 27.08.07 வரை)

ராசிநாதன் செவ்வாய்க்கு நட்பு கிரகமான குரு, செவ்வாயின் ஆட்சி வீடான விருச்சிகத்தில் அமர்ந்து வக்ரம் பெற்றாலும், சில அனுகூல பலன்களை மனமுவந்து தருவார். விரக்தியடைந்த மனதை தேற்றும் வகையில் தொழில் வளர்ச்சி உண்டாகும். குடும்பத்தில் சுமைமங்கள் நிகழ்வு, உறவினரிடம் நற்பெயர் பெறுதல், சொத்து விவகாரங்களில் நல்ல தீர்வு, புத்திரர்களின் நன்னடத்தையால் மனமகிழ்வு போன்ற பலன்கள் ஏற்படும். உறவினர்களின் பணத்தேவைகளுக்கு பொறுப்பேற்கும் நிலைகளை தவிர்ப்பதால் நன்மை உண்டு. இனிமை நிறைந்த சுற்றுலா பயணம் உருவாகும்.

### தொழிலதிபர்கள்

தங்க நகை, மோட்டார் வாகன உற்பத்தி, கல்குவாரி, மார்பிள், டைல்ஸ் உற்பத்தி தொழிலதிபர்கள், ரெடிமேட் ஆடை தயாரிப்பு, உணவுப் பொருள் தயாரிப்பு, அடுக்குமாடி குடியிருப்பு விற்பனை, நவீன வசதி நிறைந்த மருத்துவமனை நடத்துபவர்கள், மருந்து, மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு, காகிதம், விளையாட்டு சாதனங்கள் உற்பத்தி, நிதி நிறுவனம் நடத்துபவர்கள் தொழில் வளர்ச்சியில் பின்தங்கலாம் என்பதால் தேவையான புதிய செயல்திட்டங்களை வகுத்து இதை தவிர்க்கலாம். மற்றவர்களுக்கு சுமாரான நிலை இருக்கும். பேசும் வார்த்தைகள் பிறர் மனம் கவரும் வகையில் இருக்கும். இளைய சகோதரர்களிடம் பொறுப்பு தருவதை தவிர்க்கவும். வீடு, வாகன வசதி அதிகரிக்கும். புத்திரர்களால் நன்மை உண்டு. நண்பர், உறவினர் உதவி கிடைக்கும்.

### பணியாளர்கள்

அரசு மற்றும் தனியார் துறையில பணிபுரிபவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை சரிவர நிறைவேற்ற கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும். குறிப்பாக ஸ்டீல் உற்பத்தி, அரிசி ஆலைகள், எண்ணெய் தயாரிப்பு, மோட்டர் வாகன வடிவமைப்பு, கட்டுமானப் பணிகள், மருத்துவத்துறை பணியாளர்கள், காவல்துறை, இராணுவம், புலனாய்வுப்பிரிவு, இரத்த சேமிப்பு துறையில் பணிபுரிபவர்கள் தங்களுக்கு நிர்வாகம் வழங்கும் உத்தரவு மற்றும் வழிகாட்டுதல்களை கவனமுடன் செயல்படுத்துவதால் அவப்பெயர் வராத நல்ல நிலையைப் பெற முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுப நிகழ்வும் உண்டாகும். சிலருக்கு விரும்பிய பணியிட மாற்றம் கிடைக்கும். பூர்வ சொத்துக்களில் வளர்ச்சி நிலை ஏற்படும்.

### வியாபாரிகள்

வியாபாரிகளுக்கு பொதுவாக சுமாரான காலகட்டம். குறிப்பாக நகை, ஜவுளி, ஆட்டோ, மொபைல் உதிரிப்பாகங்கள், பாத்திரம், வீட்டு உபயோகப் பொருள், மா வகை உணவுப் பொருள், விவசாய இடுபொருட்கள், பழம், காய்கறி, குளிர்பானங்கள், மருந்து, காகிதம், அடகுக்கடை நடத்துபவர்கள் வாடிக்கையாளர்களை தற்காத்துக் கொள்ளும் யுக்திகளை பின்பற்றினால் தான் வளர்ச்சி காண இயலும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் பங்குதாரரின் மனப்பாங்கு அறிந்து தொழில் வளர்ச்சியில் நடவடிக்கை எடுக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் தகுந்த சமயத்தில் உறுதுணையாக செயல்படுவர். வெளியூர் வியாபாரத் தொடர்புகளில் சரக்கு பரிமாற்ற பாதுகாப்பை உறுதி செய்வது நலம்தரும்.

### மாணவர்கள்

விவசாயம், மருத்துவம், தொழிற் கல்வி, காவல், இராணுவம், சமையற் கலை, கட்டட வடிவமைப்பு, உள் அலங்கார வடிவமைப்பு, ஆசிரியர் பயிற்சி, சாலை பராமரிப்பு, ஓட்டல் மேனேஜ் மென்ட் பயிற்சி, எலக்ரிக்கல், எலக்ரோனிக்ஸ் பயிற்சி, வங்கியியல், நிதி நிர்வாகம், சட்டப்படிப்பு, கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி, ஓவியக்கலை, விளம்பர மாடலிங், இதழியல் படிப்பு பெறும் மாணவர்களுக்கு கல்வி ஸ்தானத்தை குரு பார்ப்பதால் தங்கள் திறமைகளை ஒருங்கிணைத்து கூடுதல் தர தேர்ச்சியும் சாதனையும் நிகழ்த்துவார்கள். பணவசதி சரளமாக கிடைக்கும். சக மாணவர்கள் உதவிகரமாக நடந்து கொள்வர். தந்தை, மகன் உறவுநிலை சீராக இருக்கும். மகிழ்ச்சிதரும் சுற்றுலா வாய்ப்புக் கள் நிறைவேறும்.

### பெண்கள்

அரசு மற்றும் தனியார் துறையில் பணி புரியும் பெண்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதல்களை கவனமுடன் செயல்படுத்துவதால் மட்டுமே இருக்கும் நற்பெயரை பாதுகாக்க முடியும். சக பணியாளர்களின் நல் அன்பை பெற்று வேலைப்பளுவை இலகுவான வகையில் குறைத்துக் கொள்வீர்கள். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் சிறந்த பொருளாதார வசதி கிடைக்கப்பெற்று குடும்ப நலம் பேணுவர். மாங்கல்ய ஸ்தானத்தில் குரு இருப்பதால் கணவரின் உடல், மன ஆரோக்கியம் வளர்ச்சி பெறும். உறவினர்களின் நல் அபிப்பிராயமும் உதவியும் கிடைக்கும். சுயதொழில் கூட்டுத்தொழில் புரியும் பெண் கள், வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தினால் மட்டுமே வருமானம் அதிகரிக்கும். ஆபரணங்களை பாதுகாப்பதில் கூடுதல் கவனம் வேண்டும். பிரிந்த தம்பதியர் ஒன்று சேரும் அதிர்ஷ்ட வாய்ப்பு உண்டாகும்.

### அரசியல்வாதிகள்

இதுவரை உங்கள் பக்கம் இருந்த அதிகாரிகள் உங்களின் கோரிக்கைகளை கவனிப்பதில் கட்டுப்பாடு காட்டுவர். பேச்சில் பிறரை வசீகரிக்கும் புதிய சக்தி உண்டாகும். எதிரிகள் மறைமுகமாக செயல்பட்டு உங்களுக்கு கிடைக்க இருக்கும் நன்மைகளை தள்ளிப் போட முயற்சிப்பார்கள். மிகுந்த கவனம் தேவை. ஆதரவாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். வழக்கு விவகாரங்களில் தொந்தரவு குறையும். புத்திரர்கள் உதவிகரமாக செயல்படுவர். அரசியலுடன் தொழில் நடத்தும் வாய்ப்பு பெற்றவர்கள் தகுதியான பணியாளர்கள் கிடைக்கப் பெறுவர். வீடு, வாகன வசதி அபிவிருத்தி பெறும்.

### விவசாயிகள்

கரும்பு, மஞ்சள், இஞ்சி, கடலை, வெங்காயம், மிளகாய், தக்காளி, நெல், மூலிகை வகைகள், காளான் சாகுபடி செய் பவர்கள் நல்ல விளைச்சல் பெறுவார்கள். மற்றவர்களுக்கும் பாதகமில்லை. கால்நடை அபிவிருத்தியும் விவசாயக்கருவிகள், வாகன வகைகள் புதிதாக வாங்கவும் வசதி உண்டாகும்.

**ஜோதிட மாமணி சங்கர்ஜி**

### பரிகாரம்

சிவலிங்கத்துக்கு வில்வ இலை அர்ச்சனை நடத்துவதால் சகல நன்மையும் பெறலாம்.

(தொடரும்)


# அழைப்புக்கட்டளை

இல. 16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

இராமலிங்கம் தமிழ்ச்செல்வன் பெண்
அல்லிராஜா மகள் ஜெயவதனி
சங்கையன் ஒழுங்கை, நவாலி தெற்கு,
மானிப்பாய்.

\- வழக்காளி

வழ.இல.D/656,

எதிர்

இராமலிங்கம் தமிழ்ச்செல்வன்
45/24, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தற்போது,
Thamilchelvan, Ramalingam
Hanner Str- 198
4058 - basel
Switzcrland. - எதிராளி

மேலே குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு

மேலே குறிப்பிட்டுள்ள வழக்காளி தமக்கும் உமக்கும் இடையேயுள்ள திருமணத்தை ரத்து செய்யக்கோரி இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் இவ் வழக்கிலுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2006ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 22ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப் படுத்துப்படுவதோடு சொல்லப்பட்ட திகதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

துு.சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைபு
வழக்காளியின் சட்டத்தரணி.

குறிப்பு:- விளக்கத்திகதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு கூப்பிடப்படும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரி யொன்றை இந்நீதி மன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல்மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

(479)

2006ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 05ஆம் நாளாகிய இன்று.


# சுனாமியால் பெற்றோரை இழந்த சிறார்களுக்கு

## "ஜெனிகசா" சேமிப்புத் திட்டம்

சுனாமிப் பேரழிவில் பெற்றோரை இழந்த சிறார்களின் பெயரில் மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா சேமிப்புச் செய்யும் மக்கள் வங்கியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஜெனிகசா" எனும் சேமிப்புத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டோர் விபரம் வருமாறு;

அமலதாஸ் லொஸ்ரிகா - இல. 261, பங்சால் வீதி, யாழ்ப்பாணம், றெட்ணசாமி சாந்தறூபன் - ஆதி கோவிலடி, வல்வெட்டித்துறை, தேவேந்திரம் கிருஷா - கொடுக்குளாய், ஆழியவளை, தேவேந்திரம் தனுசன் - கொடுக்குளாய், ஆழியவளை, தேவேந்திரம் நிதர்சன் - கொடுக்குளாய், ஆழியவளை, கணேசன் சிறிசுபாசினி - வத்திராயன் வடக்கு, தாளையடி, தனபாலசிங்கம் நேசகுமார் - வத்திராயன் வடக்கு, தாளையடி, திருக்குணபாலசிங்கம் விக்னா - வத்திராயன் வடக்கு, தாளையடி, செல்வ குலேந்திரம் பாலகோபி - ஆழியவளை, தாளையடி, யோகராசா அனுராஜ் - ஆழியவளை, தாளையடி, சந்திரகுமார் பிரதீபா - ஆழியவளை தாளையடி.

சந்திரகுமார் சிந்துஜன் - ஆழியவளை தாளையடி, கணேசலிங்கம் பாலகிருஷ்ணன் - ஆழியவளை, தாளையடி, தர்மலிங்கராசா விமல்தாஷ் - வெற்றிலைக்கேணி, முள்ளியவளை, தர்மலிங்கராசா குணாளன் - வெற்றிலைக்கேணி, முள்ளியவளை, பெற்றர் றொக்ஸ்மேரி றொமீனா - வெற்றிலைக்கேணி, முள்ளியவளை, ஆனந்தரூபன் அஜந்தன் - வத்திராயன் வடக்கு, தாளையடி, கரன் விதுசன் - வத்திராயன் வடக்கு, தாளையடி, விஜயகுமார் ஜெயதீபா - வத்திராயன் வடக்கு, தாளையடி, வாசின்டென் றெஜில்கா - தற்காலிக குடியிருப்பு, மணற்காடு.

யோகராசா மரிய ஜெனிஸ்ரியா - இல. 13 தற்காலிக முகாம், மணற்காடு, பாவிலுப்பிள்ளை மரிய நற்விற்சலா - ஜெ/426, பாவிலுப்பிள்ளை மரிய றொபிசன்ஸா - ஜெ/426, செம்பியன் பற்று வடக்கு, உதயகுமார் டென்சுயல் - ஜே/302, பிரதேச செயலர் அலுவலகம், சாவகச்சேரி, தெய்வேந்திரம் அருணா - ஜே/.302, பிரதேசசெயலர் அலுவலகம் சாவகச்சேரி.

விஜயகுமார் விஜயதீபா - சில்லாலை வடக்கு, ஸ்ரீபன் யோனகன் - யோகபுரம், உரும்பிராய் தெற்கு, ஸ்ரீபன் கம்ஷினி - யோகபுரம், உரும்பிராய் தெற்கு, ஸ்ரீபன் யோநதி - யோகபுரம், உரும்பிராய் தெற்கு.

தர்மராசா பாமினி - தேவரலி, நெல்லியடி வடக்கு, கரவெட்டி, சந்திரன் மொட்சாஜினி - 10, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம், சந்திரன் சாந்தகுமார் - 10, கடற்கரை, வீதிஈச்சமோட்டை, யாழ்ப்பாணம், கோபிகா மகேஸ்வரன் - கோப்பாய் வடக்கு.

கிருபாகரன் மகேஸ்வரன் - கோப்பாய் வடக்கு, துரைராசா கிருஷ்ணாநாயகி - சுப்பர்மடம், பருத்தித்துறை, துரைராசா சஜீவன் - சுப்பர்மடம், பருத்தித்துறை, விஜயராசா ரஞ்சன் - கலட்டை, பண்டத்தரிப்பு, விசயராசா சுபாஸ்கரன் - கலட்டை, பண்டத்தரிப்பு, குணசேகரம் கணேஷ் - கீரிமலை வீதி, சித்தங் கேணி, விஜயகுமார் வினுசன் - சுருக்கப்புலம், சுழிபுரம் ராஜலிங்கம் நீரோஜா - நீர்துவன், சுழிபுரம், ராஜலிங்கம் நிரோஜன் - நீர்துவன், சுழிபுரம், விக்னராஜா மேரிதிவ்யா - வல்லிபுரம் வீதி, பருத்தித்துறை துரைராஜா சசிகரன் - ஆஸ்பத்திரி வீதி, சங்கானை துரைராஜா ஜெயகரன் - ஆஸ்பத்திரிவீதி, சங்கானை வரதராசா மேனகா - பன்னாலை கிழக்கு, சுழிபுரம், வரதராசா கஜந்தா - பன்னாலை கிழக்கு, சுழிபுரம், ரவிச்சந்திரன் ஜெலஸ்ரீனா - ஆஸ்பத்திரி வீதி, சங்கானை, கனகரத்தினம் பிரசாந் - உடுத்துறை வடக்கு, தாளையடி, சுந்தரலிங்கம் சுரேகா - உடுத்துறை வடக்கு, தாளையடி, குமார் புனிதவதனி - தாளையடி வடக்கு, மருதங்கேணி.

பாவிலுப்பிள்ளை மொறிவசிங்டொன் - ஜே/426, செம்பியன் பற்று வடக்கு, கிறிஸ்துராசா கிங்லிஸ்ரன் - செம்பியன்பற்று வடக்கு, தாளையடி, கிறிஸ்துராசா அன்ரன் நிரோஜன் - செம்பியன் பற்று வடக்கு, தாளையடி, விசியறூபன் றுசானி - வட்டாரம் 2, வேலணை கிழக்கு, ராசாசேகர் பிரகாஷ் - வட்டாரம் 3, வேலணை கிழக்கு, பேரின்பநாயகம் முத்தமிழ்செல்வி - வட்டாரம் 3, வேலணை கிழக்கு, சிவகுமார் சிவகர்ணன் - பட்டியோடை கொலனி, அல்வாய்கிழக்கு, ஜவகர் லால் நேரு கஜ றூபன் - சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய். (து-133)

மனச்சாட்சி என்பது பண்பாட்டுணர்ச்சியின் வளர்ச்சியடைந்த பாகந்தான்.

-ப்ராய்டு

வலம்புரி

# இல்லாதவர்களுக்கு கொடுத்து இன்புறுவோம்

இல் வாழ்க்கையின் இலக்கு விருந்தோம்பி மகிழ்வதாகும். இது தமிழர்களின் பண்பாட்டுக் கோலம்.

விருந்தோம்பல் என்பது பண வசதி படைத்த விருந்தினர்களை அழைத்து அவர்களுக்கு அறுசுவை உண்டியும் ஐஸ்கிறீமும் கொடுத்து ஈற்றில் பீடா வெற்றிலையும் வழங்குவதன்று.

தமிழர்களின் இல்வாழ்க்கையில் விருந்தோம்பல் என்பது இல்லாதவர்களுக்கு இன்முகத்தோடு அறுசுவை உண்டி கொடுப்பதைக் குறிப்பதாகும்.

ஏழைகளுக்கு-இல்லாதவர்களுக்கு உணவு கொடுத்து அதை அவர்கள் உண்பதைப் பார்க்கும் போது ஏற்படக் கூடிய மனநிறைவே இந்த உலகில் நாம் அடையக் கூடிய மிகப் பெரும் இன்பமாகும்.

கொடுப்பதில் இன்புறும் உயர்ந்த பண்பாட்டுக் கோலம் தமிழர்களுக்கு மட்டுமே உரியது என நாம் பெருமைப்பட்டாலும்,

அதனை நாம் செய்கின்றோமா? என்ற கேள்வியை ஒருகணம் எமக்குள் எழுப்பினால், நாமே நம்முள் வெட்கப்படும் பரிதாப நிலை ஏற்படும்.

ஒரு காலத்தில் தமிழர்களின் வாழ்வியலில் இருந்து கொண்ட அறம், வீரம் என்பன இப்போது தேவையாகின்றன.

குறிப்பாக ஈழத் தமிழர்களின் சமகால வாழ்வியல் ஓர் இருட்டறைக்குள் அகப்பட்டு விட்டது.

இதிலிருந்து அரசு மீட்கும்-சர்வதேச சமூகம் காக்கும் என்றெல்லாம் எண்ணுவது தவறு.

நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதற்கு இறைவனின் அருளும் ஆத்ம பலமும் தேவையானவையாகும்.

இறையருள், ஆத்ம பலம் என்பன அறத்தாலும் கொடையாலும் வீரத்தாலும் வருவதேயாகும்.

என்னைப்போல் என் அயலவர்களையும் நேசிக்கின்றேனா? நான் உண்ணும்போது-என் குடும்பத்தார் உண்ணும்போது பக்கத்தில் இருப்பவர் பசியோடு இருக்கின்றாரா? என்பதை ஒருகணம் அறிதல் வேண்டும்.

எனக்கும் என் குடும்பத்திற்கும் இருந்தால் போதும் என்ற மனநிலை, நம் வாழ்வியலை பின்தள்ளி விடும். எனவே இன்றைய உணவுத் தட்டுப்பாடு, பொருள் தட்டுப்பாட்டில், இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுத்து உண்ணும் மேலான தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்?

தட்டுப்பாடான பொருள்களின் விலைகளை ஓர் எல்லைக்கப்பால் உயர்த்துவதை நிறுத்த வேண்டும். கலப்படம் செய்யும் கர்ம வினையைத் தடுக்க வேண்டும். இவை கட்டாயமானதாகும்.

யாழ்ப்பாணத்தில் விற்கப்படும் கலப்படம் செய்யப்பட்ட பொருள்களை நுகர்வது வேறுயாருமல்ல. எம் உடன்பிறப்புக்களே அவற்றை நுகருகிறார்கள் என்ற சிந்தனையை மனதில் கொண்டு வியாபாரிகள் தம் பணியை தொடர வேண்டும். இந்த உறுதிமொழிகளை இன்றைய தீபாவளித் திருநாளில் எடுப்போமாக!

# 2005 ஆம் ஆண்டு கலைப் பிரிவின் பட்டப் படிப்பு முடிவுகள் வெளியாகின

(நேற்றைய தொடர்ச்சி)

*இந்து தத்துவம்*

*முதலாம் வகுப்பு*

எஸ்.சர்மிளா .

*இரண்டாம் வகுப்பு(உயர் பிரிவு)*

என்.ஞானேஸ்வரி, ஆர்.கயிலநாயகி, ரி.சர்மிளா, என். தமயந்தி.

*வரலாறு*

*இரண்டாம் வகுப்பு (உயர்பிரிவு)*

எஸ்.காமினி, வி.பூமகள், எல்.சியாமிளா, ஐ.அன்ரனி டொன்பொஸ்கோ ,எஸ்.சத்யபாமா, ஆர்.சிறிதேவி, வி.விஜிதா, எம்.ஜே.மேரிமைக்டலின், எஸ்.சிவசக்தி.

*இரண்டாம் வகுப்பு (கீழ்ப் பிரிவு)*

ரி.பிரசாந்தினி, பி.டொரின் சங்கீதா , என்.கோசலா , பி. நகுலேஸ்வரி, ரி.தவதர்ஷினி, எஸ்.சுபாகினி,கே.ராகவன்.

*மொழியியல்*

*இரண்டாம் வகுப்பு(உயர் பிரிவு)*

ஆர்.சித்திராவதி, வி.ராதிகா , எஸ்.சிவஞானவதி, எஸ்.சுஜீபா , பி.துஷாகினி, வி.தாமரைச்செல்வி.

*இரண்டாம் வகுப்பு (கீழ்ப் பிரிவு)*

வை.செல்வலக்சுமி, ஏ.ஆரணி, ஆர்.வாகினி, ஏ.பிரதீபா, வி.வருஜிகா.

*ஆங்கிலம்*

*இரண்டாம் வகுப்பு(கீழ்ப் பிரிவு)*

எம்.அலோசியஸ்.

*தத்துவவியல்*

*இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவு)*

கே.ஜனனி,என்.ரதிகுமார், ஏ.றொனாட், என்.சிவகரன், ரி. சிவராஜினி, ரி.சுபாஷினி, எம்.மேரிவிஜிதா, ஏ.ஆரியதாஸ்.

*இரண்டாம் வகுப்பு (கீழ்ப் பிரிவு)*

எஸ்.இளங்குமரன், எஸ்.கலைவாணி,ஏ.சரண்ஜா,என். புவனலோஜினி, எஸ்.வசந்தி,எஸ்.லலிதராணி, என்.கிஷோக் குமார்.

*அரசியல் விஞ்ஞானம்*

*இரண்டாம் வகுப்பு(உயர் பிரிவு)*

ஆர்.ஜெயசுதா ,பி.கமலினி, பி.கிருஷ்ணவேனி, என்.பிரதீபன், கே.புஷ்பரோசினி,கே.திருவேணி, கே.வாகீஸ்வரி.

*இரண்டாம் வகுப்பு (கீழ்ப் பிரிவு)*

கே.சந்திரபவன், எல்.குவல்ரீனா ,எம்.பற்றீசியா தர்ஷனி, எஸ்.எம்.இந்தியாஸ் ஜெயராஜன், எம்.பமிலா நிலோஜினி, ஆர்.ரதிதேவி, எஸ்.செந்தூரன்,பி.சாமினி, ஆர்.துஷ்யந்தி, எம்.வளர்மதி, ஏ.தேவகி. *(தொடரும்)* (து-133)

# 41ஆயிரம் குடும்பங்கள் யாழில் இடம்பெயர்வு

## அரச சார்பற்ற நிறுவனங்கள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதி முதல் ஏற்பட்ட மோதல் காரணமாக யாழ்.மாவட்டத்தில் 41 ஆயிரத்து 50 பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 3585 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 624 பேர் 53 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக அந் நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

| பிரதேச செயலகப் பிரிவு | நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கை | நலன்புரி நிலையங்களில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை | நலன்புரி நிலையங்களில் உள்ள ஆட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | 01 | 245 | 850 |
| உடுவில் | 01 | 08 | 21 |
| காரைநகர் | 02 | 62 | 233 |
| வேலணை | 01 | 110 | 330 |
| யாழ்ப்பாணம் | 13 | 1800 | 8033 |
| நல்லூர் | 07 | 88 | 336 |
| சாவகச்சேரி | 11 | 361 | 1418 |
| கரவெட்டி | 08 | 560 | 2175 |
| பருத்தித்துறை | 08 | 340 | 1190 |
| மருதங்கேணி | 01 | 11 | 38 |
| மொத்தம் | 53 | 3585 | 14624 |

இவ்வற்றினை விட நண்பர்களுடனும் உறவினர்களுடனும் 26 ஆயிரத்து 426 பேர் தங்கியுள்ளனர்.

ஊர்காவற்றுறை-2000, வேலணை-1502, யாழ்ப்பாணம்-4517, நல்லூர்-3211,சாவகச்சேரி-8571, கரவெட்டி- 3605, பருத்தித்துறை-804, மருதங்கேணி-34,சங்கானை-479, உடுவில்-467, கோப்பாய்-247, சண்டிலிப்பாய்-989,மொத்தம்-26426.

இதேவேளை இக் காலப்பகுதியில் 134 பேர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் 75 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் 19 பேர் கடத்தப்பட்டுள்ளதுடன் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-133)

# கூட்டாட்சி முறைக்கு உட்பட்டு பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்

## இந்தியா வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கையில் உள்நாட்டுப்போர் பரவி வருவது கவலை அளிக்கிறது. கூட்டாட்சி முறைக்கு உட்பட்டு பிரச்சினைக்குத் தீர்வு காண இரு தரப்பினரும் முன்வர வேண்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்த இராணுவக் கமாண்டர்கள் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் பேசியதாவது;

அழிவையும் நாசத்தையும் ஏற்படுத்துவதற்காக தீவிரவாதிகள் நவீன முறைகளைக் கையாளுகின்றனர். இதை எதிர்கொள்வதற்காக நமது இராணுவத்தின் திறன் அதிகரிக்கப்பட வேண்டும்.

தீவிரவாதிகள் ஊடுருவுவதைத் தடுத்தால் மட்டும் போதாது. தீவிரவாதிகளுக்கு பாதுகாப்பும் அடைக்கலமும் கொடுக்கும் நாடுகளின் போக்கையும் மாற்ற வேண்டும். தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுப்பதை பாகிஸ்தான் நிறுத்தாத வரை இந்தியா தற்போதைய வழியில் சென்று பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

தீவிரவாதத்திற்கு எதிராக பாகிஸ்தானும்இந்தியாவும் கூட்டு முயற்சியில் ஈடுபடுவது பாகிஸ்தானின் எண்ணத்தை சோதிப்பதற்காகத் தான்.



ஆபத்தான,நிலையற்ற அண்டை நாட்டுடன் (பாகிஸ்தான்) நாம் வசித்துக் கொண்டிருக்கின்றோம். விஞ்ஞான வளர்ச்சி பரவலாகி விட்டதை பயன்படுத்தி பேரழிவு ஆயுதங் களும் தயாரிக்கப்படுகின்றது. அண்மையில் வடகொரியாவில் இதைக்காண நேர்ந்தது.

இலங்கையில் உள்நாட்டுப் போர் பரவி வருவது கவலை அளிப்பதாக உள்ளது. இலங்கை பிரச்சினைக்கு கூட்டாட்சி அமைப்புக்கு உட்பட்டு தீர்வு காண அர்த்தமுள்ள பேச்சு நடத்துவதில் இரு தரப்பினரும் ஆர்வமுடன் இருக்கிறார்களா? என்பது தெளிவாகத் தெரியவில்லை. இவ்வாறு மன்மோகன் சிங் கூறியுள்ளார். (ச-5)

# உணவுத்தட்டுப்பாட்டைப் போக்க சர்வதேச சமூகம் உதவவில்லை!

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் குற்றச்சாட்டு

இலங்கைத் தீவில் ஒருபுறம் யுத்த முனைப்புகள் இடம் பெற்றுக்கொண்டிருக்க மறுபுறம் சமாதான பேச்சுக்களுக்கான முன் நகர்வுகள் சர்வதேசத்தினால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

இந்த நிலையானது ஒரு போதும் ஆரோக் கியமான சமாதானப் பேச்சுக்களை தந்து விடப் போவதில்லை. ஒரு புறம் வடக்கு கிழக் கெங்கும் தமிழ் மக்கள் பாரிய பொருளாதார உணவு நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும் சூழலில் இடம் பெறும் சமாதான பேச்சுக்கள் ஊடாக எவ்வாறு தமிழ் மக்களுக்கான தீர் வை சர்வதேசம் பெற்றுத்தரப்போகின்றது என்ற கேள்வியே தமிழ் மக்கள் ஒவ்வொரு வருடைய மனதிலும் எழும் கேள்வியாகும். என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்க ளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு மாதமாக எமது யாழ். குடாநாட்டிற்கான ஒரேயொரு தரைவழிப் பாதையான ஏ-9 பாதை மூடப்பட்டதன் கார ணமாக யாழ்.குடாநாட்டு மக்கள் பாரிய மனி தாபிமான அவலத்தைச் சந்தித்து வருகின்ற போதும் இதுவரை எதுவித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளும் அரசினால் மேற்கொள் ளப்படவில்லை.யுத்தத்தால் எமது தொழில் கள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட்டுள் ளது. எமது பொருளாதாரம் திட்டமிட்டு அழிக் கப்படுகின்றது. 120,000 மேற்பட்ட கடற் தொழிலாளர்கள் பெரும் பட்டினி நிலையை எதிர்நோக்குகின்றார்கள்.

இன்றுவரை அவர்களுக்கான தொழில் செய்பவர்கள் ஒரு வேளை உணவிற்காகக் கூட ஏங்கித்தவிக்கும் நிலை காணப்படுகின்றது.

எமது வெளியிடங்களுக்கான ஒரேயொரு பாதையான ஏ-9 பாதை மூடப்பட்டு யாழ். குடாநாட்டு மக்களாகிய நாம் பாரிய மனி தாபிமான அவலங்களைச் சந்தித்திருக்கின்ற வேளையில் அதற்கான தீர்வுகள் எதுவுமே காணப்படாமல் இடம் பெறப்போகின்ற பேச் சுக்கள் ஒரு போதும் மக்களின் அவலங்க ளை தீர்க்கப் போவதில்லை. எனவே ஏ-9 பாதை திறக்கப்பட்டு எமக்கான மனிதாபி மான உதவிகள் கிடைப்பதற்கு சர்வதேச சமூ கம் முதலில் அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என வேண்டி நிற்கின்றோம் என அவ் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ஏ)

# வர்ணப் பூச்சாளர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

நிலாவரையில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் வாய் பேசா முடியாத ஒரு வர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட் டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர் அச்சுவேலி தோப்பைச் சேர்ந்த இளையதம்பி கிருபாகரன் (வயது 31) என்ற வர்ணப்பூச்சு வேலை செய்து வருபவர் என தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திலிருந்து சடலம் அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட் டமையால் வைத்தியாசாலைக்குச் சென்ற மல்லாகம் நீதிவான் சறோஜினி இளங்கோ வன் மரண விசாரணைகளின் பின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு அச்சு வேலி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.(ச-5)

# திருகோணமலையில் மீனவர் சுட்டுக்கொலை

திருகோணமலையில் அடையாளம் தெரியாத நபர்களால் மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திருகோணமலை 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ராஜகோபால் கருணாகரன் என்பவர் நேற்று முன்தினம் மீன்பிடித்துக் கொண்டி ருந்த போது சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.(ச)

## ஜெனீவாவில்...

விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்புமுன் கொழும்பில் நடாத்திய பத் திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இத னைத் தெரிவித்தார்.

இலங்கையில் வன்செயல்கள் தொடரு கின்ற போதிலும் இரு தரப்பும் பேச்சுக்கு சம் மதிப்பது அமெரிக்காவுக்கு மகிழ்ச்சியளிப் பதாக கூறினார்.

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளுமே தற்போதைய வன்முறைகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

பதற்ற நிலைகளைத் தவிர்க்க இரு தரப் பினரும் தம்மாலான அனைத்து நடவடிக் கைகளையும் மேற்கொள்ளவேண்டுமென வும் வேண்டுகோள் விடுத்தார்.

வடக்கு -கிழக்கு மாகாணங்களின் இணைப்பு சட்டவிரோதமானது என வெளி யாகியுள்ள உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தற் போதைய சூழ்நிலையில் வந்திருப்பது துர திஷ்டவசமானது எனத் தெரிவித்துள்ளார்.

இவ் விடயத்திற்கு எவ்வாறு தீர்வுகாண வேண்டும் என்பதை இலங்கையிலுள்ள சகல தரப்பினருமே முடிபு செய்யவேண்டுமென வும் கூறியுள்ளார். (ச)

## ஹோட்டல்...

பிள்ளைகள் இந்தியாவி லுள்ளனர் என விசாரணைகளில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசா ரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தி யசாலையில் ஒப்படைக்குமாறு யாழ்.பொலி ஸாருக்கு உத்தரவிட்டார். (எ-1)

# தீமையின் ஆதிக்கம் அழிவுற்று அமைதியின் அரசு உருவாகட்டும்

## யாழ்.ஆயர் வாழ்த்துச் செய்தி

(யாழ்ப்பாணம்)

தீமையின் ஆதிக்கம் அழிந்து மக்கள் விரும்பும் அமைதியின் அரசு உருவாக இறை ஆசி வேண்டுகின்றோம் என யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண் டகை தெரிவித்துள்ளார்.தீபாவளி தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

எமது இந்துமத சகோதரர்கள் கொண்டா டும் தீபாவளிப் பண்டிகையானது மற்றெல் லாப் பண்டிகைகளையும் விட மிக மகிழ்ச் சியோடு எல்லோராலும் கொண்டாடப்படு கின்ற ஒரு பண்டிகை என்ற சிறப்பைப் பெறு கின்றது.

எந்த ஒரு மத திருவிழாவும் வெளிப்படை யான விதத்தில் பல நிகழ்வுகளைக் கொண் டிருந்தாலும் உள்ளார்ந்த ரீதியாக மனி தனை ஒரு உயர்ந்த ஆன்மீக அனுபவத் திற்கு அழைத்துச் செல்லுகின்றது எனலாம்.

இந்த வகையில் ஒளியின் திருநாள் என்று அர்த்தம் பெறும் தீபாவளித்திருநாள் விளம்பி நிற்கும் ஆன்மீக அனுபவங்கள் நாம் வாழும் இக்கால கட்டத்தில் குறிப்பான அர்த்தமுடை யவையாய் இருக்கின்றன.

இன்று நம்மை சூழ்ந்துள்ள தீமையின் ஆதிக்கம் அழிந்து மக்கள் விரும்பித்தேடு கின்ற அமைதியின் அரசு உருவாக இந்த நல்ல நாளிலே இறையாசீர் வேண்டுவதோடு அனைவருக்கும் மகிழ்ச்சியான தீபாவளி நல் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம் என யாழ்.ஆயரின் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கிணற்றிலிருந்து...

சம்பவத்தில் ஈடுபட்டவ ரே கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்ததாக அப் பகுதி மக்கள் தெரிவித் துள்ளனர்.

குறிப்பிட்ட வீட்டின் கதவினை உடைத்து உட்புகுந்த நான்கு திருடர்கள் தம்மை இனங் காட்டாதவாறு முகத்தினை துணியினால் கட்டி யிருந்தனர் என்றும் இவர்கள் கொள்ளை யிட்டு விட்டு தப்பியோ டும்போது கிணற்றில் சத்தம் கேட்டதாகவும் அதிகாலை அயல வர்கள் சென்று பார்த்த வேளை ஒருவர் கிணற் றில் சடலமாக காணப்பட்டதாகவும் தெரிவித் தனர்.

இவரது சடலம் கிணற்றிலிருந்து எடுக்கப் பட்டு அடையாளம் காணப்படாத நிலையில் யாழ்.வைத்தியசாலை பிரேத அறையில் வைக் கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணை கள் இன்று நடைபெறவுள்ளது. (ச-133)

## கூலித்தொழிலாளி...

தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலத்திற்கு அருகில் எல்லாளன் படையினரினால் உரிமை கோரப்பட்டுள்ள துண்டுப்பிரசுரமும் காணப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை களை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் அரியநாயகம் பிரேதபரிசோதனைக்காக சடலத்தை மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.(எ-9,52,10)

# யாழ்ப்பாண மக்கள் நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

ஏ-9 பாதை மூடப்பட்டதால் வவுனியாவில் தவித்துக் கொண்டிருக் கும் ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று போராட்டம் நடத்தினர்.கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதி மோதலைத் தொடர்ந்து ஏ-9 பாதையை இராணு வம் மூடியது. இதனால் வவுனியாவுக்கு சென்றிருந்த யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த பொதுமக்கள் ,மாணவர்கள் உள்ளிட்ட பெருந்தொகையா னோர் மீள யாழ்ப்பாணத்துக்குத் திரும்ப முடியாத நிலை ஏற்பட்டது. உறவினர் வீடுகளிலும் ஆலயங்களிலும் அகதிகளாக தஞ்சமடைய வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டனர்.

வவுனியாவில் தவித்துக் கொண்டிருக்கும் இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் ஒரு பகுதியினரை மட்டும் கடந்த செப்ரெம்பர் 24 ஆம் திகதி பேருந்துகளில் திருகோணமலைக்கு கொண்டு சென்று அங்கி ருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இந் நிலையில் வவுனியாவில் தொடர்ந்து தவித்துக் கொண்டிருக் கும் தங்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கக் கோரி நேற்று போராட்டம் நடத்தினர். (ச-5)

## நீதிமன்ற தீர்ப்புக்கு...

பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு வெளியாக வடக்கு - கிழக்கில் கதவடைப்பை மேற்கொள்ள ஒரு அழைப்பை விடுக்க வேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்றக் குழு தீர்மானித் துள்ளது.

இதன் பிரகாரம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை வடக்குக் கிழக்கு மாகா ணத்தில் ஹர்த்தாலை நடத்துவதற்கு அழைப்பு விடுக்கத் தீர்மானித்துள்ளோம் என்றார் அவர். இனப் பிரச்சினை தீர்வில், நீதிமன்றத் தின் தீர்ப்பையும் கருத்திற் கொண்டு உடனடி யாக அதற்கான தீர்வைத்தரவேண்டும் என அவர் கேட்டுள்ளார். (ச)

## முதல் சுற்றுப்...

இரு தரப்பினருக்கும் இடையில் தொட ரும் மோதல்களைத் தீவிர மடையாது தடுப்பதே இன்றைய அவசர தேவை. இதற்கான முயற் சியில் இந்தியாவும் சர்வதேச சமூகமும் ஈடுபட்டு வருகிறது.

மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரு டனும் அனைத்துலக சமூகம் தனது உறவை அதிகரிக்க வேண்டும் என்பதே நோர்வேயின் விருப்பம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் பங்கு,விலையுடன் கூடிய பங்கு எனச் சுட்டிக் காட்டிய எரிக்சொல்ஹெய்ம் இலங்கைத் தீவின் நிலைவரம் குறித்து ஆழ்ந்த புரிந்து ணர்வுடனும் எச்சரிக்கையுடனும் இந்தியா நடந்துகொள்வதாகவும் மேலும் தெரிவித் துள்ளார். (ச)

# திருமலைக்குச் சென்ற பௌச்சர் இராணுவத்தினருடன் சந்திப்பு

திருகோணமலைக்குச் சென்ற அமெரிக்க இராஜாங்க திணைக்கள பிரதிச்செயலாளர் ரிச்சட் பௌச்சர் அங்கு இராணுவத்தினருடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

இலங்கை வருகை தந்துள்ள பௌச்சர் நேற்று திருகோணமலை சென்றார். அரச அதிகாரிகள், இராணுவத்தினர் மற்றும் அரச சார்பற்ற பிரதிநிதிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

முதலில் திருகோணடிலை அரச அதிபரை ரிச்சட் பௌச்சர் திரு கோணமலை மாவட்ட செயலகத்தில் முதலில் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

அதன் பின்னர் திருகோணமலையில் உள்ள இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்தார். திருகோணமலை மாவட்டத்தில் அர சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் திருகோணலை நகரசபை தலைவர், அதிகாரிகள் ,திணைக்கள அதி காரிகளை பௌச்சர் சந்தித்துப் பேசினார். (ச-5)

## நாகர்கோயில் கடற்பரப்பில்...

முல்லைத்தீவிலிருந்து நாகர்கோவில் நோக்கி வந்த விடுதலைப்புலிகளின் 15 இற்கும் மேற்பட்ட படகுகளை வழிமறித்து கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் இதனையடுத்து இரு தரப்பினருக் கும் இடையே மோதல் வெடித்ததாகவும் கடற்படை தெரிவித்ததாக பி.பி.ஸி.செய்தி வெளியிட்டது.

மாலை 6.30 மணி முதல் இடம் பெற்ற இம் மோதலில் 3 கடற் கரும்புலிகளின் படகுகள் உட்பட 15 இற்கும் மேற்பட்ட படகுகள் தாக்குதலில் ஈடுபட்ட தாக தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் படகுகள் இரண்டு முற்றாகச் சேதமடைந்ததாகவும் 10 பேர் வரை உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையில் இருவர் படுகாயமடைந்த தாகவும் தெரிவிக்கப்பட்டது.இத் தாக்குதல் சம்பவம் தொடர் பாக தமிழ் நெற் செய்தி வெளியிட்டது. அதில் குறிப் பிடப்பட்டுள்ளதாவது;

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நாகர்கோவில் கடற்பரப்பில் கடற்படையினர் நடத்திய வலிந்த தாக்குதலுக்கு எதிராக தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படை நடத்திய பதில் தாக்குதல் நடவடிக்கையில் கடற்படையின் இரண்டு டோறா அதிவேக தாக்குதல் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.

முல்லைத்தீவுக்குத் திரும்பிக்கொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்படையினர் மீது அரச கடற்படையினரும் விமானப்படையின் உலங்கு வானூர்திகளும் வலிந்த தாக்குதலை மேற்கொண்டனர்.

அத்துடன் தரையிலிருந்தும் விடுதலைப் புலிகளின் படகுகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தி 2 அதிவேக தாக்குதல் டோறா படகுகளை மூழ்கடித்தனர். தமது தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது. இதேவேளை இரவிரவாக பரா வெளிச்சம்போட்டு தாக்குதல்கள் தொடர்ந்ததாக வடமராட்சிச் செய்திகள் தெரிவித்தன. (ச-5,10)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.